[1989 பிப்ரவரி 13

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவரவர்கள் என்னுடைய பெருந்தன்மை குறித்துக் குறிப்பிட்டார்கள். அண்மையில் டெல்லி மாநகரம் சென்றபோது நிருபர்கள் கேட்டார்கள். இந்த ஓராண்டுக் காலத்தில் தமிழ்நாடு மாளிகையில் இருந்த மாண்புமிகு மறைந்த முதலமைச்சரவர்களுடைய படம் எடுக்கப்பட்டுவிட்டது. அது மீண்டும் வைக்கப்படுமா என்று நிருபர்கள் கேட்டார்கள். அவர்களுக்கு நான் சொன்ன பதிலை நினைவூட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே 7 ஆண்டுக்காலம் முதலமைச்சராக இருந்த என்னுடைய படம் அங்கே இருந்தது. அதை பழைய அரசு எடுத்துவிட்டது. இருந்தாலும், நான் பெருந்தன்மையோடு, முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய படத்தை டெல்லியிலே (மேசையைத் தட்டும் ஒலி)—தமிழ்நாடு மாளிகையில் வைப்போம் என்று சொல்லியிருக்கிறேன். அந்தப் பெருந்தன்மை தொடரும். (மேசையைத் தட்டும் ஒலி).

5. ஒழுங்குப் பிரச்சினை.

(அ) தற்காலிகப் பேரவைத் தலைவர்கள் நியமனம் குறித்து.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே Point of order, Pro Tem Speaker, Article 180 (1)-ன்படி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிகழ்ச்சிகள் தொடங்கிய பிறகுதான் பேரவை உறுப்பினர்கள் மற்ற ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்ப முடியும். (குறுக்கீடு) இரண்டாவது, அவை முன்னால் என்ன பிரச்சினை எழுப்பப்படுகிறதோ, அது தொடர்பான ஒழுங்குப் பிரச்சினை மட்டும்தான் எழுப்ப முடியும். முதலில் ஆளுநர் உரையில் வாதத்தைத் தொடங்கிய பிறகு, தாங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்களோ, அதை நீங்கள் தாராளமாகச் சொல்லலாம். ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

4. தகவல் கோரல்—தொடர்ச்சி.

முன்னாள் முதலமைச்சர்களின் உருவப் படங்களைப் பேரவையில் வைத்தல்—தொடர்ச்சி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் பெருந்தன்மை தொடரும் என்றார்கள். அந்த வகையிலே புரட்சித் தலைவர் அவர்களுடைய உருவப் படம் இங்கே திறந்து வைக்கப்படும் என்பதை வாக்குறுதியாக நான் எடுத்துக் கொள்கிறேன். அதோடு, அந்தப் பெருந்தன்மை மேலும் தொடர்ந்து இடைக்காலத்தில் முதலமைச்சராக இருந்த திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்களுடைய உருவப் படத்தை அமைச்சரவை கூடும் அறையில்—Cabinet Room—திறந்து வைக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

5. ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

(அ) தற்காலிகப் பேரவைத் தலைவர் நியமனம் குறித்து —தொடர்ச்சி.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, பொது பிரச்சினையைத்தான் நான் பேசுகிறேன். தலைவரவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 180-வது பிரிவின்படி Speaker, Deputy Speaker பதவிகள் Vacant என்றால் Pro Tem Speaker அமர்த்தப்பட செய்ய வேண்டும். இங்கே Thiru P. H. Pandian vacated the office of Speaker on Sunday. But, here, it was published in Indian Express that Thiru K. Ramani, C.P.M. has been appointed as Pro Tem Speaker of the Tamil Nadu Legislative Assembly. அப்படி function பண்ணுவதாகப் போட்டிருக்கிறார்கள். 5 ஆம் தேதி தான் அவர் vacate பண்ணும்போது, 1 ஆம் தேதியே Pro Tem Speaker தேவையா ? Pro Tem Speaker நியமனம் பண்ணுவதால் இரண்டு Speakers இருந்தார்கள். அது தேவையா ? அதுதான் கேள்விக்குறி. Art. 180(1) clearly says that when there is Speaker or Deputy Speaker, there is no necessity for a Pro Tem Speaker. Speaker vacancy இல்லை. இங்கே Speaker இருக்கிறார். நான் News paper-ல் இருப்பதைச் சொல்கிறேன். Indian Express தகவலைச் சொல்கிறேன். 5-ஆம் தேதிதான் Speaker பதவியை vacat செய்கிறார். Art 180 sub-clause (2)-இன்படி சொல்கிறேன். இங்கே 1-ஆம் தேதி Speaker இருக்கும்போது மேற்கொண்டு Pro Tem Speaker தேவையா ? இதை நீங்கள் சொல்ல வேண்டும். இதிலே மரபை மீறியிருக்கிறீர்கள் என்று நான் முன்பே சொன்னேன். ஆகவே Speaker Nomination ultra vires ஆகத்தான் இருக்கிறது. அப்படி இருக்கும்போது நாம் oath எடுத்தது சரிதானா என்பது பற்றிக்கூடக் கேட்டிருக்கிறேன். அவை முன் ஆதாரத்தைக் கேட்டிருக்கிறார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பேரவைத் தலைவர் சட்டபூர்வமாக பதவியில் இருக்கிறபோது, மற்றொரு பேரவைத் தலைவர் அறிவிக்கப்பட்டாலுங்கூட, அந்த பேரவைத் தலைவருடைய பதவிக் காலம் முடிந்த பிறகுதான், அடுத்து தொடருகின்றவர், அறிவிக்கப்பட்டவர் பதவிப் பொறுப்பு ஏற்கிறார். எனவே, இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனக்குள்ள ஐயப்பாட்டை உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் நடப்பதற்கு முன்பு இந்த அவையினுடைய. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்சினைகளில் ஐயப்பாடுகள், தன்னிலை விளக்கம் கேட்டால் எல்லாம் இடம் பெறக்கூடாது என்பது விதிமுறை. இதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் அமரலாம்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Speaker இருக்கும்போது, இன்னொரு Speaker தேவையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து நான் ஏற்கெனவே தீர்ப்பு அளித்திருக்கிறேன். உறுப்பினர் அவர்களுக்கு நான் இதை அறிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதவிப் பிரமாணம் பற்றி நீங்கள் தீர்ப்பளிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதவிப் பிரமாணம் என்றது உறுப்பினர்கள் பதவிப் பிரமாணமே தவிர, பேரவைத் தலைவருக்கான பதவிப் பிரமாணம் அன்று.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதவிப் பிரமாணம் பற்றியும் உங்களுடைய பதில் வரவில்லை. தீர்ப்பு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதவிப் பிரமாணம் செய்து வைத்தாலும், ஒரு பேரவைத் தலைவருடைய பொறுப்பு முடிகிற கால கட்டத்திற்கு அடுத்த நொடியிலிருந்து தான் அடுத்த பேரவைத் தலைவர் பொறுப்பு ஏற்கிறார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அடிப்படையிலே இது தேவை என்று தலைவர் அவர்கள் கூறுகிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எந்த அடிப்படையிலே என்று சொல்லத் தேவையில்லை என்பது பேரவைத் தலைவருடைய நிலை. (மேசையைத் தட்டும் ஒலி).

(ஆ) ஆளுநர் உரை (ஆங்கில மொழிபெயர்ப்பு) யில் பிழைகள் உள்ளதாகக் குறிப்பிடப் பெறுவது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே பிழைகள் இருக்கின்றன. Translation-லும் பிழைகள் இருக்கின்றன. இதையெல்லாம் தாங்கள் அருள்கூர்ந்து பார்க்க வேண்டும். இதில் ஒழுங்கு பிரச்சினை இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை,